சார்பு நீதிமன்றம் மேட்டுப்பாளையம்

ஓ.எஸ்.எண்.154/2019

2024 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 01 ம் நாள் வா.சா.1 என்பவரது சாட்சிய வாக்குமூலம் (1873 ம் ஆண்டு 10 ஆவது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு. தினேஷ் குமார், இளநிலை உதவியாளர், என்பவரால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | வள்ளியம்மாள் | வயது | 56 |
| க/பெ | சுப்பையன் | வட்டம் | மேட்டுப்பாளையம் |
| விலாசம் | வெள்ளியங்காடு கிராமம். | மாவட்டம் | கோவை |
| | | தொழில் | விவசாயம் |

**சாட்சி மனுவின் பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு 1 மற்றும் 2 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை :**

நான் தற்போது தாக்கல் செய்து உள்ள ஆவணங்களுக்கும் வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரி அல்ல. 94 செண்ட் எனக்கு பாத்தியப்பட்டது என்று தான் வழக்கை தாக்கல் செய்து உள்ளேன் என்றால் சரி தான். ஆனால் சுவாமி நாதன் எங்களுக்கு 80 செண்ட் மட்டுமே விற்பனை செய்ததாக சாட்சியம் அளித்து உள்ளார் என்றால் சரி அல்ல. புல எண். 498/2 C க்கான வருவாய் ஆவணங்கள் தற்போதும் சுவாமி நாதன் மற்றும் அவரது குடும்பத்தார் கையிலேயே உள்ளது என்றால் சரி அல்ல. எங்கள் பெயரிலும் உள்ளது. அந்த சொத்துக்களை சுவாமி நாதன் தான் எங்களுக்கும் பிரதி வாதிகளின் முன் பாத்தியஸ்தர்களுக்கும் விற்பனை செய்து உள்ளார் என்றால் சரி தான். சுவாமி நாதனுக்கு என்ன உரிமை உள்ளதோ அதே உரிமை தான் எங்களுக்கும் முன் பாத்தியஸ்தர்களுக்கும் உள்ளது என்றால் சரி தான். அதே உரிமை தான் தற்போது பிரதிவாதிகளுக்கு

பாத்தியப்பட்டது என்றால் சரி அல்ல. சுவாமி நாதன் குடும்பத்தினருக்கு புல எண். 498 மற்றும் 486 ல் எந்த உரிமையும் இல்லை என்றால் சரி தான். அந்த 2 புல எண்களில் சுவாமிநாதனுக்கு என்ன உரிமை உள்ளதோ அதனை எங்களுக்கும் பிரதிவாதிகளின் முன் பாத்தியஸ்தர்களுக்கும் விற்பனை செய்து விட்டார் என்றால் சரி தான். நான் 80 செண்ட் நிலத்தை மட்டும் கிரையம் பெற்று விட்டு தவறுதலாக 94 செண்டுக்கு வழக்கு தாக்கல் செய்து உள்ளேன் என்றால் சரி அல்ல. புல எண். 498/2 C ல் உள்ள பாதைக்கும் நான் கிரையம் பெற்ற புல எண். 486 க்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரி அல்ல. நான் தவறுதலாக சொத்தை வாங்கி விட்டு அந்த பகுதியில் இருக்கும் பிரதிவாதிகள் மீது இந்த வழக்கு உட்பட சுமார் 4 – 5 வழக்குகள் தாக்கல் செய்து உள்ளேன் என்றால் சரி அல்ல. பிரதிவாதிகள் மீது மட்டும் அல்லாமல் சின்னச்சாமி வகையறா, பழனிச்சாமி மற்றும் அந்த பகுதியில் உள்ள விவசாயிகள் மீது வழக்குகள் தாக்கல் செய்து உள்ளேன் என்றால் சரி அல்ல. அதனால் தான் நான் தற்போது வரை சொத்துக்களை உட்பிரிவு செய்யவில்லை என்றும், பிரதிவாதிகளின் சொத்துக்களை அபகரிக்க வேண்டும் என்பதற்காகவே இந்த வழக்கை தாக்கல் செய்து உள்ளேன் என்றால் சரி அல்ல. எனக்கு 94 செண்ட் பாத்தியம் என்று காட்ட வருவாய் ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரி அல்ல. கூட்டு பட்டா உள்ளது. எனக்கு 80 செண்ட் மட்டுமே பாத்தியம் என்றும் பிரதிவாதிகளின் இடத்தைஅபகரிக்க வேண்டும் என்ற நோக்கத்திலேயே இந்த வழக்கை தாக்கல் செய்து உள்ளேன் என்றால் சரி அல்ல. நான் தாக்கல் செய்து உள்ள ஆவணங்களுக்கும் நான் கோரி உள்ள பரிகாரத்திற்கும் சம்பந்தம் இல்லாமல் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரி

அல்ல. அதனால் வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரி அல்ல.

| |
|---|
| மேலே கண்ட சாட்சியின் வாக்குமூலம் திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் அவர் கூறியவாறு பதியப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டப்பட்டு அவரால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்ட பின்னர் அவரிடம் கையொப்பம் /கைரேகை பெறப்பட்டது. |

ஒம்/- கா. கெங்காராஜ்.

சார்பு நீதிபதி, மேட்டுப்பாளையம்.